பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 187

திங்கட்கிழமை
02 ஜூன் 2025

வைகாசி 19 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056



ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர்

## இந்தமாத இறுதியில் இலங்கை வருகிறார்

கொழும்பு, ஜூன் 2
ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் வொல்க்கெர் டேர்க் இந்த மாத இறுதியில் அல்லது 11

## ஆசியாவில் பரவும் கொரோனா இலங்கையிலும் கால்பதித்தது!

### உறுதிப்படுத்தியது மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம்



கொழும்பு, ஜூன் 2
ஆசியாவில் தற்போது பரவிவரும் கொரோனா வைரஸ் திரிபு இலங்கையிலும் அடையாளம் காணப்பட்டுள்ளது என்று இலங்கை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஓமிக்ரான் துணை மாறுபாடுகளான LF.7 மற்றும் XFG தொற்றுகள் உள்ள நோயாளிகள் உள்நாட்டில் இனங்காணப்பட்டுள்ளனர் என்று மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் வைரஸ் 12



## யாழ். நூலகம் எரியூட்டல்; 44 ஆவது நினைவு நேற்று

யாழ்ப்பாணம், ஜூன் 2
யாழ்ப்பாணம் பொதுநூலகம் காடையர்களால் எரிக்கப்பட்டு 44 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், அந்தத் துயரச்சம்பவத்தை நினைவுகூரும் நிகழ்வு நேற்று 12

# 161 உள்ளூராட்சிசபைகள் இன்று இயங்க ஆரம்பிக்கும்

### உள்ளூராட்சி ஆணையாளர் பங்கேற்புடன் ஏனைய சபைகளில் ஆட்சி அதிகாரம் நிர்ணயம்

**கொழும்பு, ஜூன் 2**
**நாட்டில் 161 உள்ளூராட்சிசபைகளில் இன்று ஆட்சி அமைக்கப்படவுள்ளது. ஏனைய 178 உள்ளூராட்சிசபைகளில் உள்ளூராட்சி ஆணையாளரின் பங்கேற்புடன் ஆட்சி அதிகாரம் நிர்ணயிக்கப்படவுள்ளது.** 11

## கிளிநொச்சி மருத்துவமனை கிணற்று நீரில் மலத்தொற்று

### தொற்று நீக்கும் நடவடிக்கை வேகம்

கிளிநொச்சி, ஜூன் 2
கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக் கிணற்று நீரில் மலத்தொற்று இருப்பது ஆய்வில் கண்டறியப்பட்டுத் தற்போது தொற்று நீக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மருத்துவமனை 11

## 'செல்பி'யால் விபரீதம்; 2 சிறுமிகள் உயிரிழப்பு

### குமிழமுனையில் கேணிக்குள் நடந்த சோகம்



முல்லைத்தீவு, ஜூன் 2
முல்லைத்தீவு, குமிழமுனையிலுள்ள கொட்டுக்கிணற்றுப் பிள்ளையார் ஆலயக் கேணிக்குள் தவறி வீழ்ந்து 15 11

## செம்மணிப் புதைகுழி அகழ்வு இன்று மீண்டும் ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜூன் 2
யாழ்ப்பாணம், செம்மணி சிந்துபாத்தி மாயனத்தில் மேற்கொள்ளப்படும் அகழ்வு நடவடிக்கைகள் இன்று மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன. ஏற்கனவே இரு நாள்கள் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சீரற்ற காலநிலை காரண 11

## சைக்கிள் - சங்கு கூட்டு ஆக்கபூர்வமான பேச்சு!

### சித்தார்த்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 2
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் ஆக்கபூர்வமான கலந்துரையாடல் ஒன்று நேற்று நடந்துள்ளது. எமது இறுதித் தீர்மானத்தை இன்று வெளிப்படுத்துவோம் என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத்தலைவர்களுள் ஒருவரான த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.
வடக்கு, கிழக்கில் உள்ளூராட்சிசபைகளில் ஆட்சியமைப்பது தொடர்பில் தமிழ்க் கட்சி 11

## சிறுவன் உட்பட இருவரின் உயிரை பறித்த தாமரை

### தோணி கவிழ்ந்ததால் துயரம்

விரிவு பக்கம் 11

### விபத்தில் பலியான
## பிரபாகர சர்மாவின் மகனும் உயிரிழப்பு!



யாழ்ப்பாணம், ஜூன் 2
கடந்த திங்கட்கிழமை ஓமந்தையில் நடந்த விபத்தில் யாழ்ப்பாண இந்தியத் துணைத் தூதரக அதிகாரியான சிவஸ்ரீ சச்சிதானந்தக்குருக்கள் பிரபாகர சர்மா உயிரிழந்திருந்த நிலையில், இந்த விபத்தில் சிக்கிப் படுகாய 12

## நாட்டுக்குத் திரும்பும் ஏதிலிகள் இனிக் கைதாகமாட்டார்கள்

### கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 2
இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பும் புலம்பெயர் இலங்கையர்களைக் கைதுசெய்யக்கூடாது என அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.
யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி 11

### முச்சந்தி முரளி

'அப்ப சைக்கிளோட சங்கு சங்கமமானா எல்லாரும் புனிதராகி விடுவினமோ?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



02.06.2025 திங்கட்கிழமை

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 01.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4089 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கங்கள் | 53 54 74 78 |
| விசேட எழுத்து | R |

| ஹந்தஹறண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 01.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1156 |
| வெற்றி இலக்கினம் | ரிஷபம் |
| வெற்றி இலக்கங்கள் | 16 21 28 41 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 01.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0115 |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கங்கள் | 2 6 0 1 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 01.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2195 |
| ஆங்கில எழுத்து | Z |
| சுப்பர் இலக்கம் | 04 |
| வெற்றி இலக்கங்கள் | 45 52 62 78 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 01.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5847 |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கங்கள் | 3 3 8 0 3 7 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 01.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1877 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 04 06 66 71 |
| விசேட எழுத்து | A |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 01.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0422 |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கங்கள் | 8 0 3 7 |

# நிறைவேற்று அதிகாரம் நீக்கம் அரசாங்கம் 'கப்சிப்'

## ராஜகருணா எம்.பி. சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜூன் 2**

**நிறைவேற்று அதிகாரம்மிக்க ஜனாதிபதி முறையை நீக்குவார் என்று எல்லாத் தேர்தல் மேடைகளிலும் வாக்குறுதி வழங்கப்பட்டது. தேர்தல் முடிந்து 7 மாதங்கள் ஆகின்றன. அதுபற்றி எந்தக் கதையும் இல்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜ கருணா கோரிக்கை விடுத்துள்ளார்.**

அவர் மேலும் கூறுகையில், ஜனாதிபதி அநுரகுமாரதிஸாநாயக்க தேர்தலுக்கு முன் வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தையும் இப்போது மறந்து செயற்படுகிறார். நிறைவேற்று அதிகாரம்மிக்க ஜனாதிபதி முறையை நீக்குவ தற்காகவே மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதிகாரத்தை வழங்கினர். நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளது. இலகுவாக நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை நீக்கலாம்.

இந்த நாட்டில் எத்தனையோ ஜனாதிபகள் நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவதாக வாக்குறுதி வழங்கியே ஜனாதிபதி பதவியைக் கைப்பற்றினர். எவரும் அதைச் செய்யவில்லை.

அந்தப் பதவியை அனுபவித்துவிட்டுச் சென்றனர். அதே பட்டியலில் அநுரவும் இடம்பெற வேண்டாம்- என்றார். (ச-75)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 01.06.2025 | ஞயிற்றுக்கிழமை | 0555 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| V | 7 3 7 4 0 0 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 01.06.2025 | ஞயிற்றுக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2821 | D | 35 66 70 73 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 01.06.2025 | ஞயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| C | 03 14 76 78 | 4982 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | தினம் |
| 01.06.2025 | ஞயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0695 | 13 43 46 |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 01.06.2025 | ஞயிற்றுக்கிழமை | |
| சிம்மம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 10 17 18 62 | 4533 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 01.06.2025 | ஞயிற்றுக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| C | 02 | 59 61 68 72 | 1997 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 01.06.2025 | ஞயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| E | 19 54 57 75 | 2647 |




# வவுனியா மாநகரசபைக்கு 4 பெண் உறுப்பினர்கள்

வவுனியா, ஜூன் 2

வவுனியா மாநகரசபையில் மேலதிக ஆசனங்களின்மூலம் நான்கு பெண் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

21 உறுப்பினர்களைக் கொண்டுள்ள வவுனியா மாநகரசபையில் பெண்களுக்கான இடஒதுக்கீட்டின்மூலம் 5 பெண்கள் உறுப்பினராக இருக்கவேண்டும். இருப்பினும் வட்டாரத்தில் ஒரு பெண் வேட்பாளரே நேரடியாக வெற்றிபெற்றிருந்தார்.

இந்திநிலையில் 3 மேலதிக ஆசனங்களைப் பெற்ற தமிழரசுக்கட்சியில் வைரமுத்து வரதலட்சுமி, உருத்திரசிங்கம் யோகேஸ்வரி, ரவீந்திரன் லக்ஷிகா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியின் ஓர் ஆசனத்துக்கு சஜீவினி அபிஷேக் நியமிக்கப்பட்டார். (ச-110)

# நூறு பேருக்கு எதிராக அரசு விரைவில் 'செக்'

கொழும்பு, ஜூன் 2

முன்னாள் அமைச்சர்கள், செயலாளர்கள், அவர்களின் உறவினர்கள் உள்ளிட்ட 100 பேருக்கு எதிரான மிகப்பெரிய திருட்டுகள் தொடர்பான விசாரணைகள் 50 ஐ நிறைவு செய்துள்ள சி.ஐ.டியினர் அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்செய்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திடம் விசாரணை நிறைவுக் கோவைகளை ஒப்படைத்துள்ளனர்.

கேள்விமனு உள்ளிட்ட பல்வேறு ஊழலில் அவர்கள் ஈடுபட்டு கோடிக்கணக்கில் பணத்தை ஈட்டியுள்ளதோடு அரசுக்கும் மிகப்பெரிய நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளனர் என்று விசாரணை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும் வாகனத் துஷ்பிரயோகம் மற்றும் அபிவிருத்தி மோசடி தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்ட முன்னாள் அமைச்சர்கள் மூன்று பேருக்கு எதிரான வழக்கு விரைவில் தாக்கல்செய்யப்படவுள்ளது என்று இலஞ்ச,ஊழல் ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் கூறினார். அந்த முன்னாள் அமைச்சர்கள் மூவரும் அநுராதபுரம், பதுளை மற்றும் குருநாகல் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரியவருகிறது. (ச-75)



# தேசபந்துவிடம் குறுக்கு விசாரணை

கொழும்பு, ஜூன் 2

பதவி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனிடம் குறுக்கு விசாரணை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தேசபந்து தென்னக்கோனின், தவறான நடத்தை மற்றும் கடுமையான அதிகாரத் துஷ்பிரயோகம் சம்பந்தமாக விசாரணை நடத்த நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவினால் இந்த குறுக்கு விசாரணை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் 16ஆம் திகதி முதல் தேசபந்து தென்னக்கோனிடம் குறுக்கு விசாரணை நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# பகட்டு அரசாங்கம்

## விமல் கொதிப்பு



கொழும்பு, ஜூன் 2

பிரதமரின் பாதுகாப்புக்கு 300இற்கு மேற்பட்ட பாதுகாப்பு ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதோடு அவரின் பயணத்துக்கு ஐந்து வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. சாதாரண மக்களுக்கு இல்லாத சிறப்பு எங்களுக்கு வேண்டாம்என்று அமைச்சர்கள்கூறினார்கள். பிரதமரும் கூறினார். ஆனால், பிரதமர் அதிக சலுகைகளை அனுபவிப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் :

சாதாரண மக்களுக்கு இல்லாத சிறப்பு எங்களுக்கு வேண்டாம் என்று கூறிய இந்த அரசாங்கம் அதிக சலுகைகளை அனுபவித்துவருகின்றது.

பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியடைவதற்கான அத்தனை வேலைகளும் இடம்பெறுகின்றன. தொழில்சாலைகள் மூடப்படுகின்றன . மின்கட்டணத்தை மேலும் அதிகரித்தால் தொழிற்சாலைகள் மூடப்படும். அது பொருளாதாரத்தை வீழ்ச்சியுறுத்தும் வறுமை அதிகரிக்கும்.

2028 இல் எப்படி சர்வதேசக் கடனை அடைக்கப்போகிறது இந்த அரசு? அதற்கான திட்டம் என்ன? கணக்காளர் நாயகம் இன்னும் நியமிக்கப்படவில்லை. ஜனாதிபதி நியமித்த இரண்டு பேரை அரசமைப்புப் பேரவை நிராகரித்துள்ளது. இந்தியாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை வெளிப்படுத்தாமல் மறைத்துவைத்துள்ளார் என்றார். (ச-75)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 6 திட்டங்களுக்கு ஒதுக்கிய நிதி 2 திட்டங்களுக்கே பயன்பாடு!

## எஞ்சும் தொகை எதற்கு? சங்கானை மக்கள் கேள்வி

யாழ்ப்பாணம், ஜூன் 2

சங்கானைப் பிரதேசத்தின் அனர்த்த நிலைமைகளைக் கட்டுப்படுத்துவதற்காக வெள்ள வடிகால்களை அமைப்பதற்காக 6 திட்டங்களுக்கு 52 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தபோதிலும் தற்போது குறித்த தொகையில் இரண்டு திட்டங்களை முன்னெடுக்க வீதி அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது என்று யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பிரதேசவாசிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சங்கானை பிரதேசத்தின் வீதி அபிவிருத்திகள் அதிகாரசபையால் வீதி அபிவிருத்தி முறையற்ற விதத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக வடிகால் வசதிகளின்றி விவசாய நிலங்கள் உட்பட சில பகுதிகள் மழைகாலத்தில்நீரில்மூழ்குகின்றன. இது குறித்து கடந்த காலங்களில் பொதுமக்களால் சுட்டிக்காட்டப்பட்டு சங்கானைப் பிரதேசசெயலகத்தின் ஊடாக நிதி கோரப்பட்டு 6 திட்டங்களை மேற்கொள்வதற்காக 52 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.

இந்தநிலையில்52மில்லியன் ரூபாவில் இரண்டு திட்டங்கள் மாத்திரம் வீதி அபிவிருத்தி அதிகாரசபை முன்னெடுக்கவுள்ளது. இரண்டு திட்டங்களுக்கு ஏன் ஆறு திட்டங்களுக்குரிய நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இந்த எஞ்சிய நிதியை குறித்த அதிகாரசபை என்ன செய்யவுள்ளது? இது குறித்து சங்கானைப் பிரதேச செயலாளரிடம் சரியான தகவல்களைப் பெற்றுவந்த நிதியை முழுமையாகப் பயன்படுத்த அனுமதி வழங்கவேண்டும் என்றும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-125)



# 60 லீற்றர் கசிப்புடன் கைதானவருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜூன் 2

60 லீற்றர் கசிப்பு மற்றும் 600 லீற்றர் கோடா ஆகியவற்றுடன் சுதுமலை வடக்கில் கைது செய்யப்பட்ட நபரை விளக்கமறியலில் வைக்க மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் விசேட படையணியினருக்குக் கிடைத்த தகவலுக்கமைவாக சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் கசிப்பு, கோடா மற்றும் உற்பத்திக்காக பயன்படுத்திய உபகரணங்களுடன் சந்தேகநபரை கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்தனர்.

சந்தேகநபரை சான்றுப்பொருள்களுடன் மல்லாகம் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முற்படுத்தியபோதே எதிர்வரும் 12ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ச-125)

# விரிவாகின்றது அமைச்சரவை

## மேலுமிருவர் இணைப்பு

கொழும்பு, ஜூன் 2

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மேலும் இரண்டு அமைச்சர்களை நியமிக்க உள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தின் அமைச்சரவையில் தற்பொழுது 23 பேர் அங்கம் வகிக்கின்றனர். இந்த எண்ணிக்கையை 25 ஆக அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் வாரங்களில் இந்த நியமனம் மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி அல்லது பிரதி அமைச்சர் முனீர் முலாபருக்கு இராஜாங்க அமைச்சர் அல்லது அமைச்சரவை அந்தஸ்துடைய அமைச்சர் பதவி வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அமைச்சரவையில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் இல்லாத காரணத்தினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# நாடு திரும்புவோரைப் பாதிக்காதவாறு சட்டத்தில் விரைவில் திருத்தம்!



கொழும்பு, ஜூன் 2

நாட்டில் அசாதாரணச் சூழல் காணப்பட்டபோது அக்காலத்தில் ஏதோவொரு வகையில் வெளியேறியவர்கள் மீண்டும் நாடு திரும்பும்போது நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்காத வகையில் சட்டத்தில் திருத்தம் செய்யப்படும் எனப் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அசாதாரண சூழல்களில் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்தவர்கள் மீண்டும் நாடு திரும்புவதற்கு எந்தவிதமான தடைகளும் ஏற்படுத்தப்படவில்லை.

மேலும், பலாலி விமானநிலையத்தில் கைதுசெய்யப்பட்ட நபரை விடுவிப்பதற்காக குற்றவியல் விசாரணை திணைக்களத்துக்கு உரிய வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் அசாதாரணச் சூழலில் வெளியேறியவர்கள் மீண்டும் நாடு திரும்பும்போது நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்காத வகையில் சட்டத்தில் திருத்தம்செய்ய அமைச்சரவைப் பத்திரத்தை விரைவில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன- என்றார். (ச-இ)

# கஞ்சாவுடன் கைதானவருக்கு பொலிஸ் தடுப்புக்காவல்



யாழ்ப்பாணம், ஜூன் 2

கஞ்சாவுடன் கைதானவரைப் பொலிஸ் தடுப்புக்காவலில் தடுத்து வைத்து விசாரிக்க மல்லாகம் நீதவான் நீதிமன்ற உத்தரவு பிறப்பித்துள்ளது என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

சுன்னாகம் கிழக்குப் பகுதியில் கஞ்சா விற்பனை தொடர்பில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவலுக்மைவாக சம்பவ இடத்துக்கு விரைந்த விசேட அதிரடிப்படையினர் 60 கிராம் கஞ்சா போதைபொருளுடன் 39 வயதான சந்தேகநபர் ஒருவரை அண்மையில் கைது செய்தனர்.

சந்தேகநபரை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தியபோதே மூன்று நாள்கள் பொலிஸ் தடுப்புக்காவலில் தடுத்து வைத்து விசாரிக்க நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளது. (ச-125)

# சேந்தான்குள வடிகாலை புனரமைத்துத் தாருங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ். சேந்தான்குளம் வடிகால் அமைப்பைப் புனரமைப்புச் செய்து தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. மீள்குடியேற்றம் நடைபெற்று இன்று 10 வருடங்களுக்கு மேலாக கடக்கின்றபோதிலும் குறித்த பகுதியின் மூலமாகவே கடல் நோக்கி வெள்ளநீர் வெளியேற்றப்படுகின்றது. இருந்த பொழுதிலும் அந்த வெள்ளநீர் வெளியேறுவதற்கான வடிகால் அமைப்பு ஒழுங்குமுறையில் மேற்கொள்ளப்படவில்லை. எனவே அதனை உரிய முறையில் புனரமைத்துத் தருவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர். (ச-125)

# பொலிஸ் பரிசோதகர் சங்கத்துக்கு புதிய அதிகாரிகள் நியமனம்

கொழும்பு, ஜூன் 2

இலங்கைப் பொலிஸ் பரிசோதகர் சங்கத்துக்கு புதிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் உள்ள நாலந்தா கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்ற 70 ஆவது பொலிஸ் பரிசோதகர் பொதுக் கூட்டத்தில் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

யாழ்ப்பாண தலைமையகத்தின் பொலிஸ் பொறுப்பதிகாரி சம்பி பலிஹேன புதிய தலைவராகவும், திவுலபிட்டிய பொலிஸ் நிலையத்தின் பிரதான பொலிஸ் பரிசோதகர் நளின் வீரவர்தன துணைத் தலைவராகவும், குற்றப்புலனாய்வுத்துறையின் கணினி குற்றப் பிரிவின் பொறுப்பாளர் எரந்த திப்போட்டுவாவ தலைமைச் செயலாளராகவும், தேசிய பொலிஸ் பயிற்சிக் கல்லூரியின் பொலிஸ் பரிசோதகர் ருவன் பலிஹவடன கௌரவப் பொருளாளராகவும் பெரும்பான்மை வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1945 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இலங்கைப் பொலிஸ் பரிசோதகர் சங்கம், தற்போது நாடு முழுவதும் சுமார் 14,500 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ச-23)

# நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறப்பு

கொழும்பு, ஜூன் 2

மத்திய மலைநாட்டில் பெய்துவரும் மழை காரணமாக மலையகத்தில் இருக்கின்ற நீரேந்தும் பகுதிகளில் நீர்மட்டம் அதிகரித்து காணப்படுகின்றது.

இந்தநிலையில் மேல் கொத்மலை, விமலசுரேந்திர, காசல்ரீ ஆகிய நீரேந்தும் பகுதிகளில் நீர்மட்டம் அதிகரித்துதையடுத்து நீரை வெளியேற்றுவதற்காக வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

நீர்தேக்கப் பகுதிகளில் தாழ்வான பிரதேசத்தில் வாழ்கின்ற குடியிருப்பாளர்கள் அவதானத்துடன் இருக்கும் படி அதிகாரிகளால் பணிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய
(ராசிபலன்)

**மேடம்:** கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவுசெய்யநேரும். வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால், வெளியில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகக்கூடும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். குடும்பத்தில் உறவினர்களை அனுசரித்துச் செல்லவும்.

**மிதுனம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணையின் தேவையைப் பூர்த்திசெய்வீர்கள்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கக்கூடும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கன்னி:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. இன்று குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். சிலருக்கு குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று வழிபடும் வாய்ப்பு ஏற்படும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்:** சாதிக்கும்நாளாக அமையும். வாழ்க்கைத் துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். கொடுத்த கடன் திரும்பக் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முக்கிய முடிவு எடுப்பதற்கு உகந்தநாள். சுபநிகழ்ச்சிகளுக்கான பேச்சு வார்த்தை சாதகமாகமுடியும்.

**தனுசு:** மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதாக இருந்தால் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. பிள்ளைகளுக்காக செலவுசெய்யவேண்டிவரும்.

**மகரம்:** புதிய முயற்சிகளையும் பயணங்களையும் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிறிய அளவில் உடல் நலம் பாதிக்கப்பட்டாலும், எளிய சிகிச்சையினால் உடனே சரியாகிவிடும்.

**கும்பம்:** மகிழ்ச்சிதரும் நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் இருந்து நல்ல செய்தி கிடைக்கக்கூடும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாகமுடியும். உறவினர்கள்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.



# இடமாற்றத்தில் முறைகேடுகள் திருத்தாவிடின் போராடுவோம்!

**யாழ்ப்பாணம், ஜூன் 2**

**ஆசிரியர் இடமாற்றக்கொள்கையில் முறைகேடுகள் திருத்தப்படாவிடின் நாளைமறுதினம் புதன்கிழமை ஆளுநர் அலுவலகம் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுப்போம் என்று இலங்கைத் தாய்மொழி ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.**

இலங்கைத் தாய்மொழி ஆசிரியர் சங்கத்தின் கலந்துரையாடல் யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்றபோது, இலங்கைத் தாய்மொழி ஆசிரியர் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் கல்வித் திணைக்களத்தின் இடமாற்றக் கொள்கையால் பாதிக்கப்பட்டவர்கள் கலந்துகொண்டனர். இதன்போது அவர்கள் குறிப்பிடுகையில், வெளிமாவட்டத்தில் ஆசிரியர்கள் பணியாற்றுவதனைத் தடுப்பது சங்கத்தின் நோக்கமல்ல. ஆசிரியர்கள் ஏமாற்றப்படாது வெளிமாவட்டங்களில் அவர்கள் ஆற்றவேண்டிய காலத்தை வரையறுக்கவேண்டும். தற்பொழுது ஆசிரியர்களாக கடமை புரிகின்ற நாம் கடந்த 2004 ஆம் ஆண்டு பட்டதாரிகள் வேலைவாய்ப்பின்றி இருந்த காலப்பகுதியில் மத்திய மாகாணத்தில் ஆசிரியர் பணிக்கு அமர்த்தப்பட்டோம் . 10 வருடங்கள் மத்திய மாகாணத்திலே ஆசிரிய சேவையை நிறைவுசெய்துவிட்டு வடக்கு மாகாணத்திலே இடமாற்றத்தைப் பெற்றுவந்தோம். தற்பொழுது சேவை கருதி இடமாற்றம் என்ற போர்வையில் இடமாற்றம் பெற்றுச் செல்லுமாறு மாகாணக் கல்வி பணிப்பாளர் கூறுகின்றார். நாம் மீண்டும் தூரதேசம் செல்லவேண்டும் என்பதனை நினைக்கின்றபோது ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எமது கோரிக்கைகளை இலங்கைத் தாய்மொழி ஆசிரியர் சங்கம் ஏற்று எமக்கு ஒரு நிரந்தரத் தீர்வை வழங்கவேண்டும்- என்றனர். (ச-125)

## 3 கிலோ ஹெரோய்ன் இளைஞர் கைது!

**கொழும்பு, ஜூன் 2**

வெயங்கொடையில் 3 கிலோ 655 கிராம் ஹெரோய்யின் வைத்திருந்ததற்காக ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட நேரத்தில் போதைப்பொருள் கடத்தலுக்குப் பயன்படுத்தப்படும் ஹைஏஸ் ஒன்றும் அளவீட்டுக் கருவிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.சந்தேகநபர் செல்ல பகுதியைச் சேர்ந்த 26 வயதுடையவராவார். வெயங்கொடைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)



## திருக்கேதீஸ்வர ஆலய மஹோற்சவம் ஆரம்பம்!

**மன்னார், ஜூன் 2**

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் பெருந் திருவிழா கொடியேற்றத்துடன் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

திருக்கோணேச்சரம் ஆலயத்திலிருந்து பாரம்பரிய முறையில் எடுத்துவரப்பட்டு தீர்த்தம் மூலஸ்தானத்தில் வீற்றிருக்கும் சிவலிங்கத்துக்கு அபிஷேகம் செய்ததைத் தொடர்ந்து சுபநேரத்தில் ஆலயப் பிரதம குருக்கள் தலைமையில் கொடியேற்றம் இடம்பெற்றது. எதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் 9ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறும். (ச-41)

## விசாகப் பொங்கல்

**முல்லைத்தீவு, ஜூன் 2**

முள்ளியவளை அருள்மிகு காட்டு விநாயகர் ஆலய வைகாசி விசாகப் பொங்கல் உற்சவம் இன்று திங்கட்கிழமை தீர்த்தமெடுத்தலுடன் ஆரம்பமாகவுள்ளது. இன்று முதல் எதிர்வரும் 8ஆம் திகதி வரை காட்டு விநாயகர் ஆலய அம்மன் சந்நிதியில் புனித உப்பு நீரில் விளக்கெரியும் அற்புதக் காட்சியை அடியவர்கள் காலை, மாலை குறித்த நேரத்தில் கண்டுகொள்ளமுடியும். 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 10.30 மணிக்கு மடைப்பண்டம் எடுக்கப்பட்டு கச்சு நேர்ந்து தூடி பிடித்து வளர்ந்து வைத்து பொங்கல் உற்சவம் மிகவும் சிறப்பான முறையில் இடம்பெறவுள்ளது. (ச-22,100)

# கோவலன் கண்ணகி நாடகம் கூத்துவடிவில் அரங்கேற்றம்!

முல்லைத்தீவு மாவட்டத்தின் வற்றாப்பளை கண்ணகி அம்மன் பொங்கலையும், முள்ளியவளை காட்டுவிநாயகர் ஆலயப் பொங்கலையும் முன்னிட்டு முள்ளியவளைக் கலைஞர்களின் சிறப்பான நடிப்பில் கோவலன் கண்ணகியின் சரித்திர வரலாற்று நாடகம் கூத்துவடிவில் முள்ளியவளை காட்டு விநாயகர் ஆலய முன்றலில் ஆற்றுகைப்படுத்தப்பட்டது.

நிகழ்வின் ஏற்பாட்டாளர் அருட்குகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வற்றாப்பளை கண்ணகி அம்மன் பொங்கல் குருக்கள் ரகுநாதகுருக்கள், சிறப்பு விருந்தினர்களாக காட்டுவிநாயர் ஆலய நிர்வாகத் தலைவரும் சட்டத்தரணியுமான க.பரஞ்சோதி உள்ளிட்டவர்கள் கலந்துசிறப்பித்தனர். இதன்போது கூத்தின் அண்ணாவிமார்களான து.கஜன், க.இந்துசன் மற்றும் உடை அலங்காரம் செய்த து.காந்தன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். (ச-41-19)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை


நாம் அறிந்திருப்பதையும் அறிந்துகொள்ளாமல் இருப்பதையும் அறிந்துகொள்வதே உண்மையான அறிவு.
—டால்ஸ்டாய்—

# தாகம் தீர்க்க மறுக்கும் வனவளத்திணைக்களம்

வடக்கு மாகாணம் எப்போதுமே வானம் பார்த்த பூமிதான். வானம் இரங்கினால் மட்டுமே இங்கே நீர்வளம் சுரக்கும். இல்லையேல் வறண்டுபோகவேண்டியதுதான். அதிலும் யாழ்ப்பாணத்தைப் பற்றிச் சொல்லவே வேண்டிய தில்லை. வடக்கில் உள்ள ஏனைய மாவட்டங்களிலாவது குறிப்பிட்டுச் சொல்லக்கூடியளவுக்கு ஆறுகளும், பெரிய குளங்களும் உள்ளன. அவை மழைநீரை ஏந்தி, கோடை காலத்தில் அந்த மாவட்டங்களின் குடிதண்ணீர்த் தேவையையும், விவசாயத்தேவைகளையும் பூர்த்திசெய் கின்றன. ஆனால் யாழ்ப்பாணத்தில் மழைநீர் வழிந்தோடும் வாய்க்காலையே வழுக்கையாறு எண்டு திருப்திப்பட வேண்டிய நிலை. அதேபோன்று மிகப்பரந்தளவிலான நீரைத் தேக்கிவைக்கக்கூடிய பெரிய குளங்களும் இல்லை. இருந்த சிறு குளங்களையும் மேவிப்பரவி, கட்டடக் காடுகளாக்கிவிட்டோம். அப்படியிருக்க எப்படி மழை நீரைத் தேக்கிவைத்து, கோடைகாலத்தில் தாகம் தீர்க்க அந்த நீரைப் பயன்படுத்தமுடியும்? அதனால் மனிதனில் அட்டைகள் இரத்தம் குடிப்பதைப்போல, யாழ்ப்பாணத் தின்நிலத்தடி நீரை உறிஞ்சி, இந்த நிலத்தை வறண்டுபோக வைக்கிறோம். பல பகுதிகளில் நிலத்தடி நீர் கூட இல்லை.

இந்தநிலையில் யாழ்ப்பாணத்தின் குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்திசெய்ய பல்வேறு திட்டங்கள் பரிசீலிக் கப்பட்டு, அவை சிலபல காரணங்களால்நிராகரிக்கப்பட்டு, இறுதியில் எல்லாத்தரப்புகளும் ஏற்றுக்கொண்ட திட்டமே பாலியாற்றுக் குடிதண்ணீர்த் திட்டம். வடக்கு மாகாணத்தில் அதிக நீர்க்கொள்ளவைக் கொண்டதாக பாலியாறு காணப்படுகின்றது. 68.4 கிலோமீற்றர் நீளமுள்ள இந்தப் பாலியாறு வவுனியா மாவட்டத்தின் புளியங்குளத் தில் ஆரம்பித்து, வடக்கு மற்றும் வடமேற்குத் திசைநோக்கி நகர்ந்து முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களைக் கடந்து கடலுக்குள் கலக்கின்றது.இப்படி வீணாகக் கடலுக்குள் கலக்கும் பாலியாற்று நன்னீரை மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் இடைமறித்து 4.6 கிலோமீற்றர் நீளமும், 41 அடி உயரமும் கொண்ட மண் அணைக்கட்டுமூலம் நீர்த்தேக்கத்தை உருவாக்கி, அதன் மூலம் யாழ்ப்பாணத்துக்கும், கிளிநொச்சிக்கும் குடி தண்ணீரை வழங்குவதே பாலியாற்றுக் குடிதண்ணீர்த் திட்டத்தின் நோக்கம்.

எவ்வித எதிர்ப்புகளும் இல்லாததால் இந்தத் திட்டத்தை நினைத்தபடி 2029 ஆம் ஆண்டுக்குள் பூர்த்தி யாக்கிவிடலாம் என்ற நம்பிக்கையில், இப்போது இடியை இறக்கியிருக்கிறது வனவளத்திணைக்களம். இந்தத் திட்டத்துக்கென பயன்படுத்தப்படவுள்ள 860 ஏக்கர் பரப்பளவு வனப்பகுதியில் அடர்மரங்கள் இருப்பதால், அதனை விட்டுக்கொடுக்கமுடியாது என்று வனவளத் திணைக்களம் போர்க்கொடி தூக்கியுள்ளது. அதற்குப் பதி லீடாக மீள்வனமாக்கலுக்காக அரசகாணிகள் வழங்குவதாகக் கூறியபோதிலும் அதனையும் வனவளத் திணைக்களம் சாதகமாகப் பரிசீலிக்கத் தயாராக இல்லை. உண்மையில் வனவளத்திணைக்களம் சொல்வது போல, பாலியாற்றுத்திட்டத்துக்கென பயன்படுத்தப்படவுள்ள 860 ஏக்கர் வனப்பகுதியில் 10 சதவீதமான பகுதியில் மாத் திரமே அடர்மரங்கள் உள்ளன. ஏனைய இடங்கள் வெறும் தரவைகள் தான் என்று இந்தத் திட்டத்தோடு சம்பந் தப்பட்ட நிபுணர்கள் தரவுகளோடு சொல்கிறார்கள். புத்தளத்திலும், முல்லைத்தீவிலும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர்காட்டினை அழித்து, அடாத்தாகக்குடியேற்றங்களை அரச ஆதரவுடன் செய்தபோது கைகட்டி, வாய்பொத்தி சேவகம் செய்த வனவளத்திணைக்களம், யாழ்ப்பாணத்தில் தவித்த வாய்க்கு தண்ணீர் தரும் திட்டத்துக்கு மட்டும் தடையாக மாறுவதன் மர்மம் புரியவில்லை. இந்தத் திட்டத்தின் அவசியத்தைப்புரிந்துகொண்டு, இழக்கப்படும் வனப்பகுதியை அரசகாணிகளில் மீளுருவாக்கம் செய்யும் மாற்றுத்திட்டத்தை நடைமுறைப்படுத்தினால் மக்க ளுக்கும் தண்ணீர் கிடைக்கும், வனப்பகுதியும் பேணப் படும். தனது அழுங்குப்பிடியில் இருந்து வனவளத் திணைக்களம் இறங்கிவராதவரைக்கும் யாழ்ப்பாணத் துக்கு பாலியாற்று நீர் கிடைப்பதென்பது கானல் நீர்தான்.



# யாழ்ப்பாணத்தில் சில சபைகளில் தே.ம.சக்தி ஆட்சி அமைக்கும்



யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ்.மாவட்டத்தில் சில சபைகளில் தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைக்கும். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம்மீது புலம்பெயர்வாழ் இலங்கையர்களுக்கு நம்பிக்கை உள்ளது.

எனவே, சில தீயசக்திகளால் பரப்பபடும் கதைகளை அவர்கள் நம்பமாட்டார்கள் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சிசபைகளுக்குத் தேசிய மக்கள் சக்தி சார்பில் தெரிவாகியுள்ள உறுப்பினர்களின் உறுதியுரையேற்பு நிகழ்வு அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய அகதியொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இதனையடுத்து இந்தியாவில் இருந்து வருபவர்களை அநுர அரசாங்கம் கைதுசெய்கின்றது எனச் சிலர் குற்றச்சாட்டுகளை முன்வைத்துவருகின்றனர். அவரை அரசாங்கம் கைதுசெய்யவில்லை. இந்த விடயத்தில் உடனடியாக அரசு தலையிட்டுள்ளது.

தீய குணம் படைத்த - தீய நோக்கத்துடன் செயற்படும் அரசியல் சக்திகள் உள்ளன. அந்தத் தீயசக்திகளைச் சுத்தப்படுத்தவேண்டும். அதனை நாம் செய்யவேண்டும் - என்றார். (ச-26)

# லாப்ஸ் எரிவாயு விலையில் மாற்றமில்லை



கொழும்பு, ஜூன் 2
லாப்ஸ் சமையல் எரிவாயுவின் விலையில் ஜூன் மாதம் எந்தத் திருத்தமும் மேற்கொள்ளப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லாப்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி நிரோஷன் ஜே. பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

இறுதியாக ஏப்ரல் மாதத்தில் லாப்ஸ் சமையல் எரிவாயுவின் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. 12.5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 420 ரூபாவால் அதிகரிக்கப்பட்டதுடன் 5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 168 ரூபாவால் அதிகரிக்கப்பட்டது. (ச-இ)

# அபாயகர மரங்கள் அகற்ற 5 குழுக்கள்

அபாயம்மிக்க மரங்களை அடையாளம் கண்டு அவற்றை அகற்றுவதற்காக 5 விசேட குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என கொழும்பு மாநகரசபை தெரிவித்துள்ளது.

கொழும்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் மரங்கள், கிளைகள் முறிந்து வீழ்ந்த 35 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இவற்றில் அதிகமானவை தனியார் இடங்களை அண்மித்த பகுதிகளில் பதிவானதாக கொழும்பு மாநகர சபை தெரிவித்தது. (ச-இ)

# எரிபொருள் விலை மாற்றமில்லை

கொழும்பு, ஜூன் 2
ஜூன் மாதத்துக்கான எரிபொருள் விலைகளில் எவ்வித திருத்தமும் மேற்கொள்ளப்படாது என இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

மாதாந்த விலை மீளாய்வு அட்டவணை இருந்தபோதிலும், தற்போதைய சந்தை நிலைவரங்கள் விலை மாற்றங்களுக்கு அவசியமானதாக இல்லை எனவும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (ச-இ)

# இலஞ்ச முறைப்பாடுகள் 4 மாதங்களில் 1,726

இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஆயிரத்து 726 முறைப்பாடுகள் பெறப்பட்டுள்ளதாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்தக் காலகட்டத்தில், உயர் நீதிமன்றத்தில் சுமார் 33 வழக்குகளை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு தாக்கல்செய்துள்ளது.

இதில் இலஞ்சம் தொடர்பான 24 வழக்குகள், ஊழல் தொடர்பான 7 வழக்குகள் மற்றும் நிதிமோசடி தொடர்பான 2 வழக்குகள் அடங்குகின்றன எனக் கூறப்பட்டுள்ளது. (ச-இ)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை
செவ்வாய்க்கிழமை- வைகாசி 20
03.06.2025
சுபநேரம் : 01.22- 11.52
ராகுகாலம் : 02.52 - 04.22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதைப்பொருள்களுடன்
# கைதான இளைஞருக்கு தடுப்புக்காவல் விசாரணை

யாழ்ப்பாணம், ஜூன் 2

சுன்னாகம் பகுதியில் ஹெரோய்ன் மற்றும் ஐஸ் போதைப் பொருளுடன் கைதான இளைஞரைப் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க மல்லாகம் நீதிமன்று அனுமதி வழங்கியுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். யாழ். சுன்னாகம் புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் உள்ள வீடொன்றில் ஹெரோய்ன் மற்றும் ஐஸ் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தநிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டார். (ச-125)

## கைதடி, நாவற்குளி கமக்காரர் அமைப்பின் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

கைதடி கமநல சேவை எல்லைக்குட்பட்ட கைதடி-நாவற்குளி கமக்காரர் அமைப்பின் 2025-2026 ஆண்டிற்கான பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை செவ்வாய்க்கிழமை (03.06.2025) முற்பகல் 10.00 மணிக்கு கைதடி நாவற்குளி ஸ்ரீமுருகன் சனசமூகநிலைய மண்டபத்தில் தலைவர் திரு.ஜ.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது. உறுப்புரிமை ஏற்ற அனைத்து விவசாயிகளும் தவறாது கலந்து கொள்ளுமாறு வெண்டுகின்றோம்.

**நிர்வாகத்தினர்.**

## அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பின் முடிவுகள்

வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேச செயலக விளையாட்டுப் பேரவையினால் நடாத்தப்பட்ட அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பின் அதிர்ஷ்டசாலிகளினுடைய இலக்கங்கள்.

**முதலாம் இடம் - இலக்கம் 10 795**
**இரண்டாம் இடம் - இலக்கம் 11 779**
**மூன்றாம் இடம் - இலக்கம் 55 27**

விளையாட்டுப் பேரவை வலிகாமம் மேற்கு சங்கானை.

## மாவட்டச் செயலகம், கிளிநொச்சி
## பெறுகை அறிவித்தல்.

கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பின்வரும் விபரங்களைக் கொண்ட குடிசார் வேலைகளுக்கான தேசிய பெறுகை பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

| இல | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் | மதிப்பீட்டுத் தொகை(ரூபா) (வரி நீங்கலாக) | ICTADதர பதிவு | கேள்வி வங்கி பிணைப்பணம்/ காலம் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 1 | KN/EB/13/Imp /25/1111-10 | Renovation of Gents Summary Quarters (No-2) at District Secretariat, Kilinochchi | 16 மில்லியன் | C7, Building | ரூபா. 240,000/- 29.09.2025 வரை | 5000.00 |
| 2 | KN/EB/13/Imp /25/1111-11 | Painting & Repairing Works in Two Storey M.S.O Family Quarters at District Secretariat, Kilinochchi | 8.4 மில்லியன் | C8, Building | ரூபா. 126,000/- 29.09.2025 வரை | 3500.00 |


1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல விலைக்கோரலாளர்களாலும் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவராவர்.
   I. நிர்மாணப் பயிற்சி கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் (ICTAD/CIDA) தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   II. இக்டாட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   III. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச்செயற்றிறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அட்டவணைப்படுத்தப்படாமலிருத்தல் வேண்டும்
2. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல:-0212285663, பக்ஸ் இல:-0212283966)
3. கேள்வி ஆவணங்களை 03.06.2025ஆம் திகதியிலிருந்து 16.06.2025ஆம் திகதி வரை முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை வேலை நாட்களில் கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.
4. இப்பெறுகை தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டம் (Pre bid meeting) 13.06.2025 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.
5. இரு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி, பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட, பெறுகை ஆவணங்களையும் கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணங்களையும் சகல பெறுகை ஆவணங்களையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு அமைவாக ஒப்படைத்தல் வேண்டும்.
6. முத்திரையிடப்பட்ட பெறுகை ஆவணங்கள் யாவும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "KN/……………..." என ஒப்பந்த இலக்கம் குறிப்பிடப்பட்டு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு 17.06.2025 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு முன் கிடைக்கப்பெற கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். பெறுகை ஆவணங்கள் யாவும் உடனடியாக திறக்கப்படும். பெறுகைகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்க முடியும்.
7. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.
8. தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட பெறுகைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

சு.முரளிதரன்
திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவர் / மாவட்டச் செயலாளர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(CR/45238) J-1

# மரண அறிவித்தல்

பிறப்பு
11 . 02 . 1952



இறப்பு
01 . 06 . 2025

## இராசேந்திரம் சிறிராசா

சங்குவேலி தெற்கு, மானிப்பாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் சிறிராசா அவர்கள் நேற்று (01.06.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசேந்திரம்-செல்லம்மா தம்பதியின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான மகாலிங்கம்-தையல்நாயகி தம்பதியின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற றேணுகா அவர்களின் அன்புக் கணவரும் துளசி, சபேசன், சரவணன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சாருஜன், லதாங்கி ஆகியோரின் அன்பு மாமனாரும் அனன்யாவின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான லோகேந்திரராஜா, ஜெயராஜா, லோகநாயகி, ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவசண்முகம், சந்திரா, றஜனி, சுந்தரலிங்கம், காலஞ்சென்ற சிவசக்தி மற்றும் நடேசலிங்கம், நவநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2025) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**076 724 1972**
**077 609 9003**

**சங்குவேலி தெற்கு,**
**மானிப்பாய்.**

## சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ-து)
## வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர் அட்டவணை காட்சிப்படுத்தல்

சங்க கிளைரீதியாக வாக்களிக்க தகைமையுடைய வாக்காளர் பட்டியலும், செயற்பாடற்ற அங்கத்தவர் பட்டியலும் 30.06.2024 உடன் முடிவுறுத்தப்பட்டு கிளைகளில் 29.05.2025ம் திகதி தொடக்கம் 18.06.2025ம் திகதி வரையான காலப்பகுதிவரை காட்சிப்படுத்தப் படுகின்றது. இந்த வாக்காளர் பட்டியலில் தகுதியிருந்தும் தமது பெயர் முகவரி இடம்பெறாது இருந்தாலோ அல்லது ஏதாவது ஆட்சேபனைகள் இருப்பின் தகுந்த ஆதாரங்களுடன் எழுத்து மூலம் 19.06.2025ம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் "செயலாளர், பலநோக்கு கூட்டுறவுச்சங்கம், கண்டிவீதி, சாவகச்சேரி" என முகவரியிட்டு நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்து உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சங்கத்தின் இயங்கும் கிளை நிலையங்களில் அந்தந்த கிளைக்கான வாக்காளர் பட்டியலும், இயங்காது உள்ள கிளை நிலையங்களின் வாக்காளர் பட்டியல் பின்வரும் இடங்களிலும் சங்க தலைமை அலுவலகத்திலும் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

| கிளை இலக்கம் | கிளையின் பெயர் | காட்சிப்படுத்தப்பட்டுள்ள இடம் |
|---|---|---|
| 1 | தென்மராட்சி | கிராமசேவையாளர் அலுவலகம் J/300 சாவகச்சேரி நகரம் |
| 2 | சாவகச்சேரி தெற்கு | கிராமசேவையாளர் அலுவலகம் J/306 நுணாவில் கிழக்கு |
| 3 | நுணாவில் கிழக்கு | கிராமசேவையாளர் அலுவலகம் J/307 நுணாவில் மத்தி |
| 4 | நுணாவில் ஜோதி | கிராமசேவையாளர் அலுவலகம் J/308 நுணாவில் மேற்கு |
| 6 | மீசாலை கிழக்கு | கிராமசேவையாளர் அலுவலகம் J/318 மீசாலை கிழக்கு |
| 7 | வேரக்கேணி | கலைவாணி சனசமூக நிலையம் மட்டுவில் மத்தி |
| 8 | மலர்மகள் | உபதபாலகம் மட்டுவில் தெற்கு சாவகச்சேரி |
| 10 | மட்டுவில் வடக்கு | கிராமசேவையாளர் அலுவலகம் J/313 மட்டுவில் வடக்கு |
| 16 | சாவகச்சேரி வடக்கு | கிராமசேவையாளர் அலுவலகம் J/304 மண்டுவில் |
| 17 | வேம்பிராய் | கிராமசேவையாளர் அலுவலகம் J/321 மீசாலை வடக்கு |
| 18 | மீசாலை வடக்கு | மீசாலை வடக்கு சனசமூக நிலையம் புத்தூர்சந்தி |
| 20 | சாவகச்சேரி வடகிழக்கு | பெரியரசடி சனசமூக நிலையம் மடத்தடி |

இக்காலப்பகுதிக்குள் ஏதேனும் ஆட்சேபனைகள் கிடைக்கப் பெறாதவிடத்து காட்சிப்படுத்தப்பட்ட பட்டியல் அடிப்படையில் கிளைக்குழுத் தெரிவுகள் நடாத்தப்படும்.

**தலைவர்** **செயலாளர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/ வயாவிளான் மத்திய கல்லூரி முன்னைநாள் ஆசிரியரும் யா/ ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலய ஓய்வுநிலை அதிபருமாகிய

# உயர்திரு. செல்லையா பரமேஸ்வரன்

அவர்களின்

# மணிவிழா மடல்




## உயர்திரு. செல்லையா பரமேஸ்வரன் அவர்கள் (SLPS - II)

பிறந்த இடம் : அளவெட்டி
பிறந்த திகதி : 1965.06.02
தந்தை : செல்லையா
தாய் : சோதிப்பிள்ளை
ஆரம்பக் கல்வி : யா/ அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்
இடைநிலை, உயர்கல்வி : யா/ அளவெட்டி அருணோதயா கல்லூரி
பட்டப்படிப்பு : கலைமாணி பேராதனைப் பல்கலைக்கழகம்
பட்டப்படிப்பின் கல்வி : டிப்ளோமா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### சேவை விபரம்

**ஆசிரியராக**

| | |
|---|---|
| 01.09.1992 - 31.12.1992 | : யா/ இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி |
| 01.01.1993 - 10.01.1996 | : யா/ பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம் |
| 11.01.1996 - 30.01.1997 | : கிளி/ உருத்திரபுரம் மகா வித்தியாலயம் |
| 31.01.1997 - 30.09.1997 | : மு/ மல்லாவி மத்திய கல்லூரி |
| 01.10.1997 - 22.07.2000 | : யா/ பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம் |
| 23.07.2000 - 22.07.2007 | : யா/ வயாவிளான் மத்திய கல்லூரி |

**அதிபராக**

| | |
|---|---|
| 23.07.2007 - 01.01.2016 | யா/ ஈவினை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை |
| 02.01.2016 - 25.04.2016 | யா/ உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை |
| 26.04.2016 - 30.05.2025 | யா/ ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் |



### யா/வயாவிளான் மத்திய கல்லூரியின் முன்னைநாள் அதிபரின் வாழ்த்துமடல்

க.கனகராசா
முன்னைநாள் அதிபர்,
யா/வயாவிளான் மத்திய கல்லூரி.

**பல்துறை விற்பன்னர் திருவாளர் செல்லையா பரமேஸ்வரன்**

ஓய்வு பெறும் அதிபர் திருவாளர் செல்லையா பரமேஸ்வரன் அவர்கள் ஓய்வுபெறுவதையொட்டி நடைபெறும் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். வாய்ப்பை வழங்கிய ஏற்பாட்டாளர்களிற்கும் இறைவனுக்கும் நன்றி கூறுகின்றேன்.

என்னை பொறுத்தவரையில் யா/வயாவிளான் மத்திய கல்லூரிக்கு 2001 ஆம் ஆண்டு யூலை மாதம் நான் அதிபராக நியமிக்கப்பட்ட போது சந்தித்த சிறந்த ஆசிரியர்களுள் இவரும் ஒருவர். தலைமைக்கு மதிப்பளித்து நடந்து கொண்ட இவர் பின் சிறந்த அதிபராக(தலைவராக)வும் விளங்கினார்.

இவர் என்னோடு பல வருடங்கள் இணைந்து கடமையாற்றிய காலத்தில் ஒரு நிகழ்வு அவரை என்றைக்குமே ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கும். அதாவது அகில இலங்கை சின்மயா மிசன் நடாத்திய கதம்ப நிகழ்ச்சிப் போட்டிக்கு எமது மாணவர்களை தயார்ப்படுத்தி குறித்த வில்லிசை கதம்ப நிகழ்வில் யாழ் மாவட்டத்தில் மட்டுமல்லாது தேசிய மட்டத்திலும் முதலாம் இடத்தை பெற்றுக் கொடுத்து பெருமை சேர்த்துள்ளார். இதுவொன்றே போதும் அவரது சிறந்த ஆளுமையை எடுத்துக் காட்டுவதற்கு. ஏனெனில் அதன் முழுப்பொறுப்பையும் அவரே ஏற்றுக்கொண்டவர். அதனால் தான் அவரை பல்துறை விற்பன்னர் என்பதில் பெருமையடைகின்றேன்.

மேலும் அக்காலத்தில் ஆசிரியர் கழக தலைவராக இருந்து அதிபர் ஆசிரியர்களிடையே சிறந்த புரிந்துணர்வை ஏற்படுத்தி பாடசாலையை சலனமின்றி நடாத்தி செல்வதில் உறுதுணையாக இருந்தவர். அக்காலத்தில் மிகவும் பின்தங்கிய கிராமத்து பாடசாலையான ஈவினை அ.த.க. பாடசாலையில் பொறுப்பேற்க சென்றார். மிகக்குறைந்த மாணவர்களோடு சிதறிக்கிடந்த பாடசாலையை ஒன்றிணைத்து கட்டியெழுப்பி சிறந்த பாடசாலையாக மாற்றினார். அதன் பயனாக பதவி உயர்வுகளைப் பெற்று தரம் இரண்டு அதிபரானார். இறுதியாக ஏழாலை சிறிமுருகன் பாடசாலையிலிருந்து ஓய்வு பெறும் அவர்கள் எதிர்காலத்தில் சிறந்த உடல், உள ஆரோக்கியத்தோடும் குடும்பத்தரோடும் மகிழ்வாக வாழ இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்தி விடைபெறுகின்றேன்.நன்றி



### வாழ்த்துரை

ம.பிரதீப்
பிரதேச செயலாளர், மன்னார் நகரம்.
(2003 A/L வயாவிளான் மத்திய கல்லூரி)

அளவெட்டி மண் பெற்றெடுத்த தமிழ் முத்து பரமேஸ்வரன் ஆசான் என்றால் மிகையாகாது. தமிழுக்கும் சைவத்துக்கும் கல்விச் சமூகத்திற்கும் அளப்பரிய சேவைகளை ஆற்றி மணிவிழாக் காணும் மணிவிழா நாயகன் பெருமதிப்பிற்குரிய திரு.செ.பரமேஸ்வரன் அதிபரை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

வயாவிளான் மத்திய கல்லூரியில் ஆசானிடம் தமிழ்ப் பாடத்தையும் பல்வேறு ஆளுமைகளையும் கற்றேன் என்பதில் பெருமையடைகின்றேன். ஆசானின் அமைதியான புன்முறுவலுடன் கூடிய நேர்த்தியான கற்பித்தலும் வழிகாட்டலும் மாணவர்கள் மத்தியில் மிகுந்த ஆர்வத்தை ஏற்படுத்தியது. ஆசான் பல்துறை ஆற்றல் மிக்கவராக பாடசாலைகளிலும் சமூகத்திலும் மிளிர்ந்து கொண்டிருக்கின்றார். இயல், நாடக, இலக்கியத் துறைகளில் பாண்டித்தியம் மிக்க பல ஆக்கங்களையும் அரங்கேற்றங்களையும் கல்விச் சமூகத்திற்கு வழங்கி சேவையாற்றினார். அத்துடன் சைவத்திலும் ஆன்மீக செயற்பாடுகளிலும் அதிக ஈடுபாட்டுடன் சமூகத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக பணியாற்றி வருகின்றார்.

1992 ஆம் ஆண்டிலிருந்து பல பாடசாலைகளில் ஆசிரியராகவும் 2007 ஆம் ஆண்டிலிருந்து அதிபராகவும் கல்விச் சமூகத்திற்கு அளப்பரிய சேவைகளை ஆற்றி பல ஆளுமை மிக்க மாணவ சமூகத்தை உருவாக்கியுள்ளார். எமது நாட்டிற்கும் கல்விச் சமூகத்திற்கும் சிறந்த சேவையாற்றி ஓய்வுநிலைக்குச் செல்லும் உயர்திரு.பரமேஸ்வரன் அதிபரை ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகின்றேன்.



### மணிவிழா நாளில் மனம் திறந்து வாழ்த்துகின்றோம்!

குறிஞ்சிக்கவி செ.ரவிசாந்
(2007 A/L வயாவிளான் மத்திய கல்லூரி)

உலகை ஆளும் எல்லாம் வல்ல ஈசன் பெயரை
உங்கள் பெயராகக் கொண்டவரே!
தாய்மொழியாம் தமிழைத் தப்பின்றி
எமக்குப் போதித்த வித்தகரே!
அதிபராகவிருந்து தனித்துவ ஆளுமையால்
நீங்கள் ஒப்புவித்த பணிகள் எத்தனை! எத்தனை!
சைவநெறி தழைத்தோங்க, தமிழ் வாழ
நீங்கள் சாற்றிய பணிகள் எத்தனை! எத்தனை!

உங்கள் கற்பித்தல் திறமைக்கு ஈடிணை
இங்கு எவருமில்லை!
உங்கள் சொற்பொழிவாற்றலுக்கு நிகர்
இங்கு யாருமில்லை!
மணிவிழாக் காணும் இந் நாளில்
"உங்கள் மாணவர்" என்ற பெருமையுடன்
மனம் திறந்து வாழ்த்துகின்றோம்
வாழிய நீடு! வாழிய நீடு!!



### வாழ்த்துச் செய்தி

செல்வி பிரதீபா கிருஷ்ணபிள்ளை
பிரதிக் கல்விப் பணிப்பாளர் - உடற்கல்வி,
கிளிநொச்சி வடக்கு கல்வி வலயம்.

அளவையூர் மைந்தனும் விநாயகப்பெருமானின் பக்தியாளனும் புன்னாலைக்கட்டுவனில் இல்லறம் புகுந்து நல்லறமாக மிளிர்வதோடு நல்ல ஆசிரியராக சிறந்த அதிபராக கடமையாற்றி ஓய்வுபெறும் அதிபர் பரமேஸ்வரன் அவர்களை வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன்.

வயவன் அன்னையில் தமிழ்மொழியையும் சைவசமயத்தையும் கற்பித்ததுடன் கலைத்துறையிலும் திறமைமிக்கவராகத் திகழ்ந்தார். நாடகம், வில்லுப்பாட்டு, பட்டிமன்றம் ஆகிய நிகழ்ச்சிகளில் மாணவர்களை திறமையாக நெறிப்படுத்தி பல் வெற்றிகளை தடம்பதித்தவர். சைவசமயத்தை கற்பிப்பது மட்டுமன்றி சமய ஒழுக்கநெறிகளை தன்னகத்தே கடைப்பிடிக்கின்ற ஆசிரியராகவும் சிறந்த பேச்சாளராகவும் திகழ்ந்தார்.

ஆசிரியராகப் பணியமர்ந்து சிறந்த கற்பித்தல் செயற்பாடுகளின் மூலம் தனக்கென ஒருநிலை பதித்த பரமேஸ்வரன் ஆசிரியர் அதிபராக பதவியுயர்வு பெற்று கற்பித்தலில் காட்டிய திறமைபோல நிர்வாகத்திலும் தனது திறமையை சிறப்பாக இயம்பி சிறந்த ஆளுமையுள்ள அதிபராக மிளிர்ந்து இன்று தனது பணியினை நிறைவு செய்கின்றார்.

அதிபர் பரமேஸ்வரன் அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்பாகவும் நலமாகவும் அமைய எல்லாம்வல்ல விநாயகப்பெருமான் துணைபுரிய வேண்டுமென மனதார வாழ்த்தி நிற்கின்றேன்.



### மணிவிழா நாயகனுடன் மணித்துளிகள்

ம.யாதவன்
ஆசிரியர், யா/சென் ஜோன்ஸ் கல்லூரி.
(2008 A/L வயாவிளான் மத்திய கல்லூரி)

சைவமும் தமிழும் இரண்டறக் கலந்த அளவெட்டிதனிலே
செல்லையா சோதிப்பிள்ளை தம்பதிகள் பெற்றெடுத்த செந்தமிழே!

அகிலமெங்கும் காப்பான் ஆதிபரமசிவன்
ஆம் தலைமுறையே போற்றும் நம் பரமேஸ்வரன் ஐயா

இலைமறை காயாய் இருந்த நம் பலரை மேடையேற்றி அழகு பார்த்த
ஈடில்லா தமிழ்ப் பற்றாளன் எங்கள் பரமேஸ்வரன் ஆசான்

உவகையோடு உறவாடும் தந்தையானவர்
ஊரே போற்றும் உத்தம கவிஞரானவரே

எள்ளளவும் குறையாத ராஜ புன்னகைக்கு சொந்தக்காரன்
ஏதும் ஈடில்லை உங்கள் அன்பிற்கு

ஐவகை நிலங்களின் வளங்களை பெற்ற நல்லாசான்
ஒன்றாக நாம் தங்களிடம் கற்ற கலை

ஓடாது கால ஓட்டத்தில் தமிழுள்ள வரை உங்கள் புகழ்
ஔடதமாய் வாழ்வில் என்றும் இருக்கும் உங்கள் அறிவுரை

உங்கள் ஓய்வு காலம் சிறப்பாக அமைய ஆயாக்கடவையான் பாதம் பணிகின்றோம்.

**பாராட்டி வாழ்த்துவோர்**
**யா/வயாவிளான் மத்திய கல்லூரி**
**2005 O/L & 2008 A/L மாணவர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்த சனிக்கிழமை கொழும்பில் நடைபெற்ற China Sri Lanka Friendship Cup Dragon Boat Championship 2025 போட்டியில் தீவகக் கல்வி வலயத்தின் தம்பாட்டி அ.த.க. வித்தியாலய மாணவர்கள் தேசிய மட்டத்தில் Junior Boy பிரிவில் முதலாம் இடத்தையும், Junior Girl பிரிவில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர். (எ-இ)

# 2026ஆம் ஆண்டின் விடுமுறை வெளியீடு

கொழும்பு, ஜூன் 2

2026 ஆம் ஆண்டிற்கான அரச மற்றும் வங்கி விடுமுறைகள் தொடர்பான பட்டியல் அடங்கிய வர்த்தமானியை அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

கடந்த 27ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிட்டு அரசாங்கம் விடுமுறை தொடர்பான விவரங்களைக் அறிவித்துள்ளது. பொதுநிர்வாக, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஏ.எச்.எம்.எச். அபயரத்ன, இந்த அறிவிப்பை வெளியிட்டார். (ச-இ)

# சட்டவிரோத மீன்பிடி; 26 பேர் கைது

இலங்கைக் கடற்படையினர் மீன்வள ஆய்வாளருடன் இணைந்து மே 20 முதல் 25 வரை மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது சட்டவிரோதமாக மீன்பிடித்த 26 பேர் கைதுசெய்யப்பட்டுள்ள னர். கட்டைக்காடு, கொக்குத்தொடுவாய், திரியாய, நயாறு, மான்கர்னி, வாலைத் தோட்டம், குடியிருப்பு, புல்லையாரடி, வவுணதீவு மற்றும் கந்தக்குடா ஆகிய கடற்பகுதிகளில் வைத்து அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து 178 சட்டவிரோத வலைகள்,10 டிங்கிகள், மீன்பிடி உபகரணங்கள், சட்டவிரோத வெடிபொருள்கள் மற்றும் மின்விளக்கு உபகரணங்கள் ஆகியன கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன. (ச- 125)


## UNIVERSITY OF JAFFNA
## INVITATION FOR BID

1. The Chairman, Procurement Committee of University of Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the following works:

| No | Bid ID | Description of Work | Estimated Cost (Rs. In million) without VAT | Contract Period (No of Calendar Days) | Required CIDA Grade | Required Bid Security Amount and period | Non-refundable fee |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | YA/CWP/RE/C2/2025/09 | Refurbishment of Ramanathan Block at Main Premises, University of Jaffna – Phase I | 30.75 | 60 | C6 or above | Rs. 308,000.00 15.10.2025 | Rs. 8,000.00 |
| 2 | YA/CWP/RE/C2/2025/10 | Construction of Basket Ball Court, University of Jaffna, Ariviyalnagar, Kilinochchi | 6.60 | 90 | C8 or above | Rs. 66,000.00 15.10.2025 | Rs. 2,500.00 |
| 3 | YA/CWP/RE/C2/2025/11 | Refurbishment Works at Ananthakumarasamy Hostel & Balasingam Hostel, University of Jaffna | 1.81 | 60 | C9 or above | Rs. 20,000.00 15.10.2025 | Rs. 1,000.00 |
| 4 | YA/CWP/RE/C2/2025/12 | Renovation of Kitchen at Faculty of Medicine, University of Jaffna | 1.49 | 60 | C9 or above | Rs. 15,000.00 15.10.2025 | Rs. 1,000.00 |
| 5 | YA/CWP/RE/C2/2025/13 | Refurbishment Works at Faculty of Medicine, University of Jaffna | 1.27 | 60 | C9 or above | Rs. 15,000.00 15.10.2025 | Rs. 1,200.00 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction with the Institute for Construction Industry Development Authority (CIDA) as indicated in the above table.
4. Interested bidders may obtain further information from Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna and view the bidding documents at the same address on any working day from 9:00hrs to 16:00hrs.
Contact numbers are: Phone: 021 2219201 Fax: 021 221 9201.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna from 04th June 2025 until 18th June 2025 from 9:00 hrs to 16:00 hrs and upon payment of a non-refundable fee detail given above table to be deposited to the Peoples Bank, University of Jaffna branch with the Reference No "970000060000276" should be filled in the Account Number column in the Deposit Slip or the payment can be made at the Shroff counter, University of Jaffna.
6. Sealed Bids shall be delivered or sent by registered post to the Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna or be deposited in the tender box kept in the Capital Works & Planning Branch, to reach on or before 10.00 hrs on the 19th June, 2025. Bids will be opened soon after closing, at 10.00 hrs on the 19th June, 2025 at the same venue in the presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid at least for a period of 90 Days from the date fixed for receiving of Bids or any extended date.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in the Section 09 in the Bidding document.
   - In favour of "Vice Chancellor, University of Jaffna."
   - For the amount indicated in the above table against each work.
   - Issued by one of the agencies indicated in the clause 16.0 of the Schedule.9
9. Pre bid meeting will be held at the Board Room, University of Jaffna, Thirunelvely at 10.00 hrs on the 11th June, 2025 for the bid No. 01, 03,04 and 05 and at the Engineering Service Division, University of Jaffna, Ariviyalnagar, Kilinochchi at 10.00 hrs on the 12th June, 2025 for the bid No. 02.

**Chairman,**
**Department Procurement Committee,**
**University of Jaffna,**

02.06.2025

(CR/02235) J-1



### மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ. குடும்பம் 1983 கார்த்திகை 4ம் பாதம் அரச சேவையில் உள்ள சைவபோசன மணமகனுக்கு பொருத்தமான வரன் தேவை.

தொடர்புகளுக்கு: 075 023 8944


### 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 08.09.1981 — இறப்பு 21.05.2018

அமரர்

## கனகசபாபதி கௌரிநாதன்

அன்பினிலே மிகுந்தவராய் பண்பினிலே சிறந்தவராய்
மண்ணிலே உதித்து அமைவுற்ற வாழ்வினிலே
நறுமணம் பரப்பி இல்லத்தில் விருட்சமாய்
பாசநிழல் தந்தையாய்
உறவுகள் பேணிடும் கருணை வடிவமாய்
உரிமையாய் உணர்வை அன்பாய் பகிர்ந்தே
விண்ணக வாழ்வை நாடியே சென்றீர்கள்
ஆறு ஆண்டுகள் பறந்தோடிச் சென்றிருந்தாலும்
என்றென்றும் உங்கள் பாதம் போற்றியே
வாழ்ந்திடுவோம்.

ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.


என்றும் உன் நினைவுகளுடன்
தாய், தந்தை,
சகோதரர்கள், பிள்ளைகள்

(CS 58453) E-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 12 . 1933



மறைவு 01 . 06 . 2025

## கலாபூஷணம், கலைஞானச்சுடர் மூத்ததம்பி சிவலிங்கம் (ஓய்வு பெற்ற கிராம சேவையாளர்)

இனுவில் கிழக்கு, காரைக்கால் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மூத்ததம்பி சிவலிங்கம் நேற்று (01.06.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி-இரத்தினம் தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற தியாகராசா-இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் மகாலிங்கம் காலஞ்சென்ற பஞ்சலிங்கம் மற்றும் பரமலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கலைவாணி, முருகானந்தன், சரவணபவன், காலஞ்சென்ற கலைசெல்வி ஆகியோரின் அன்புத் தந்தையும் கணேசலிங்கம், தர்சினி, சுகந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் அனுஜன்-அஜி, கஜானி, ரஞ்சித்-நிலானி, சுரபி, சேயோன், துவாரகா ஆகியோரின் பாசமிகு பேரனும் அவந்திகாவின் அன்புப் பூட்டனும் காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் மகேஸ்வரி, காலஞ்சென்ற விக்கினேஸ்வரி மற்றும் மங்களேஸ்வரி காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி, அம்பிகை காலஞ்சென்ற வைரவநாதன் மற்றும் தேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**காரைக்கால் வீதி,**
**இனுவில் கிழக்கு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 312 6802-பவன்**
**+336 604 76910-வாணி**
**+417 983 90824-முருகானந்தன்**

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 2

நாவற்குழி அருள்மிகு சித்திரவேலாயுதர் தேவஸ்தான புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்டபக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக விழா எதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.


எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமை கர்மாரம்பம் ஆரம்பமாகி 7ஆம் திகதி சனிக்கிழமை காலை 7மணியிலிருந்து மாலை 4மணிவரை எண்ணெய்க்காப்புச் சாத்துதல் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

(ச-41-159)

ஓம் விராட் விஸ்வப் பிரம்ஹேந்ரமஹ

# நீங்கா நினைவலைகள்

2ஆம் ஆண்டு



திதி – வைகாசி மாத வளர்பிறை ஸப்தமி

அமரர்

**நடராசா கதிரவேலு (தம்பு)**

தோற்றம் 25.04.1940 மறைவு 27.05.2023

35ஆம் ஆண்டு



திதி – ஆவணி மாத வளர்பிறை நவமி

அமரர்

**கதிரவேலு இராஜேஸ்வரி**

தோற்றம் 07.02.1947 மறைவு 29.08.1990

**நீங்கள் எம்முடன் இல்லை என்றாலும்**
**உங்கள் நினைவுகள் எம்முடனேயே**
**ஆண்டுகள் எத்தனை சென்றாலும்**
**உங்களை நாம் என்றும் மறவோம்.**

79 காரைக்காட்டு லேன்,
வண்ணார் பண்ணை ,
யாழ்ப்பாணம்.

நீங்காத நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும்
உறவினர்கள்.

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர்

## இராமு நவரட்ணம்

திதி: ஸப்தமி (02.06.2025

தோற்றம் 19.09.1947 மறைவு 26.05.2023



**தான் வாழும் காலம் முழுவதும்**
**நம் வாழ்வை தோளில் சுமந்த**
**தெய்வம் நீங்கள்**
**என்றும் உம் நினைவுகளுடன் வாழும்**

அன்பு மனைவி
வசந்தி
மற்றும் குடும்பத்தினர்
சுன்னாகம் வடக்கு

(CS/58412) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குண்டுகள் வீசி கொன்றொழித்தது இனப்படுகொலை இல்லையா?

ரவிகரன் எம்.பி.கேள்வி

**முல்லைத்தீவு, ஜூன் 2**

**குண்டுகள் போட்டு அழித்த, அந்த அழிவுகளிலிருந்து மீண்ட எமது மக்கள், தமிழ் இனப்படுகொலை இந்த மண்ணில் இடம்பெற்றது என்பதற்குச் சாட்சியாக இருக் கின்றனர்.**

கடந்தகால இனவாத அரசாங்கங்கள்தான் இவ்வாறு ஏமாற்றினவெனப் பார்த்தால் தற்போது ஆட்சிப்பொறுப்பிலுள்ள அரசாங்கம் கூட ஏமாற்றுவித்தையையே காட்டுகின்றது.

இவ்வாறு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளின் சங்கத்தினின் போராட்டத்தில் பங்கேற்றபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் விவகாரத்தில் அரசாங்கம் கவனயீனமாகச் செயற்படுகின்றது.

குறிப்பாக எமது உறவுகள் வட்டுவாகல் பகுதியிலும் கைதுசெய்யப்பட்டார்கள், முகாம்களிலும் கைதுசெய்யப்பட்டார்கள், கடலிலும் கைது செய்யப்பட்டனர். எமது உறவுகளுக்கு கடந்தகால இனவாத அரசுகள் துன்பங்களை விளைவித்தன.

கடந்த காலங்களில் காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்துக்குத் தீர்வு வழங்கப்படுமென இந்த அரசாங்கத்தைச் சார்ந்தவர்கள் தெரிவித்தனர். ஆனால் இப்போது இனப்படுகொலை இடம்பெற்றமைக்கு ஆதாரங்கள் எவையுமில்லை அமைச்சர்களே சொல்லுமளவிற்கு நிலைமைகளைக் காணக்கூடியவாறிருக்கின்றது.

எமது மண்ணில் தமிழ் இனப்படுகொலை இடம்பெற்றது என்ற உண்மையை நாம் தொடர்ச்சியாகச் சொல்லிக்கொண்டேயிருப்போம்.

எனவே இதற்குரிய தீர்வை இந்த அரசாங்கம் தந்தேயாகவேண்டும்- என்றார். (ச-246)

# சிப்பியாறு அந்தோனியார் பெருவிழா ஆரம்பம்

மன்னார் சிப்பியாறு புனித அந்தோனியார் திருத்தலத் திருவிழா, ஆலயத்தின் பரிபாலகர் அருட்பணி லோறன்ஸ் அடிகளாரின் ஏற்பாட்டில் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு திருப்பலி மற்றும் நற்கருணை ஆராதனையும் இடம்பெறும். நாளை செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணிக்குத் திருப்பலியும், காலை 10.30 மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப்பலியும் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து மதியம் 3 மணிக்கும் மாலை 5 மணிக்கும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். ஒவ்வொரு திருப்பலி நிறைவிலும் திருச்சுரூப ஆசீர் இடம்பெறும் என அருட்பணி லோறன்ஸ் அடிகளார் தெரிவித்துள்ளார். (ச-25,60)

# தொடர்கதையாகும் ஊடக அடக்குமுறை

வடமராட்சி ஊடக இல்லம் சுட்டிக்காட்டு!

ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டு 16 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் ஊடகத்துறை மீதான அச்சுறுத்தல் தொடர்ந்துவருகின்றமைக்கு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதிவழங்கும் விடயத்தில் ஆட்சிகள் மாறினாலும் பாராமுகமாகச் செயற்பட்டுவருகின்றமையே காரணம் என யாழ். வடமராட்சி ஊடக இல்லம் சுட்டிக்காட்டியுள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமராட்சியைச் சேர்ந்த நடேசன் மட்டக்களப்பில் வாழ்ந்துவந்த நிலையில் தென் தமிழீழ மக்களுக்காக துணிச்சலுடன் செயற்பட்டு ஊடக செயற்பாட்டின்மூலம் துணைநின்றவர். அதன் காரணமாக பல சந்தர்ப்பங்களில் நேரடியாகவும், தொலைபேசி ஊடாகவும் உயிரச்சுறுத்தல் விடுக்கப்பட்டபோதிலும் ஓய்ந்து ஒதுங்காது இறுதி மூச்சு உள்ளவரை ஊடகப்பணி ஆற்றியவர்.

இறுதியாக இதே நாளில் 2004 ஆம் ஆண்டு சிறீலங்கா அரச படைகளோடு சேர்ந்தியங்கிய துணை ஆயுதக் குழுவினரால் அவர் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார். இவ்வாறு தமிழர் தாயகத்தில் நாற்பதுக்கு மேற்பட்ட ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டும், காணாமல் ஆக்கப்பட்டும், சுட்டுப்படுகொலை செய்யப்பட்டும் இல்லாமல் செய்யப்பட்டுள்ளனர். மேலும் பலர் இருக்கிறார்களா இல்லையா என்று தெரியாத நிலைகுள்ளாக்கப்பட்டுள்ளனர். சர்வதேச விசாரணைமூலமே உண்மையான குற்றவாளிகளைக் கண்டறிந்து பாரபட்சமற்ற முறையில் நீதியின் முன் நிறுத்தமுடியும் -என்றது. (ச-33-27)


# அல்வாய் படுகொலை நினைவேந்தல் நிகழ்வு


யாழ்ப்பாணம், ஜூன் 2

வடமராட்சியைக் கைப்பற்றும் நோக்கில் சிறிலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட 'லிபரேசன் ஒப்பரேசன்' இராணுவ நடவடிக்கையின்போது 1987 மே 26-31 வரை இடம்பெற்ற அல்வாய் படுகொலையின் 38 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வடமராட்சி மாலிசந்திப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் ஈகைச்சுடரினை ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர்.

'லிபரேசன் ஒப்பரேசன்' இராணுவ நடவடிக்கையின்போது ஆலயங்கள் மற்றும் பாடசாலைகளுக்குச் சென்று பொதுமக்களை பாதுகாப்பாக இருக்குமாறு இராணுவத்தினரால் உலங்குவானூர்தி மூலம் துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்டன. இதையடுத்து வடமராட்சிப் பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலயத்திலும் ஆலயச்சூழலிலும் அடைக்கலமடைந்தனர். இதன்போது ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதல்களில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டதுடன் பலர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-100)



# வணக்கமாதப் பெருவிழா மன்னாரில் பக்திபூர்வம்!

மன்னார், ஜூன் 2

கத்தோலிக்கத் திருச்சபையால், 'வணக்கமாதப் பெருவிழா' என்று அழைக்கப்படும் திருநாள் கொண்டாட்டங்கள் மன்னார் மாவட்டத்தில் உள்ள தேவாலயங்களில் பக்திபூர்வமாக இடம்பெற்றன.

தேவதாயான அன்னை மரியாள், எலிசபெத் அம்மாளை சந்தித்த தினத்தை ஒவ்வொரு வருடமும் மே மாதம் 31ஆம் திகதி கொண்டாடிவருகின்றது. இந்தத் தினத்தை முன்னிட்ட வழிபாடுகள் மற்றும் சம்பிரதாயங்கள் காரணமாக மே மாதம் வணக்கமாதம் என்று அறியப்படுகின்றது. இம்முறை வணக்கமாதப் பெருவிழா மன்னாரில் உள்ள கத்தோலிக்க ஆலயங்களில் பக்திபூர்வமாக ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளது. (ம-60)

# காணாமலாக்கப்பட்ட பிள்ளையை விடுவிக்க இலஞ்சம் பெற்றனர்!

தாயொருவர் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஜூன் 2

காணாமலாக்கப்பட்ட எனது பிள்ளையை விடுவிப்பதாகக் கூறி 3 லட்சம் ரூபா பணத்தைப்பெற்று புலனாய்வுப் பிரிவினர் என்னை ஏமாற்றினர் எனத் தாயொருவர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாங்குளத்தில் முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் 2007 ஆவது நாள் நிறைவினை முன்னிட்டு இன்றைய தினம் முன்னெடுக்கப்பட்ட கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

2007.10.14 அன்று பாடசாலை சென்ற எனது பிள்ளை வீடு திரும்பவில்லை. ஒவ்வொரு இராணுவ முகாம்களாகத் தேடி தடி எனது பிள்ளையை நான் கண்டுபிடிக்கமுடியவில்லை. இறுதியாக புலனாய்வுப் பிரிவினர் உன்னுடைய பிள்ளை உயிருடன் உள்ளான் . 13 லட்சம் ரூபா பணம் தந்தால் உன்னுடைய பிள்ளையை நாங்கள் விடுதலை செய்வோம் எனத் தெரிவித்து பணத்தைப் பெற்றுக்கொண்டனர்.

எனினும் எனது பிள்ளை கிடைக்கவில்லை. இன்றுவரை என்னுடைய பிள்ளை எனக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தமாத...

ஜூலை மாதத்தில் இலங்கைக்கு வரவுள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் வருகையை வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் உறுதி செய்துள்ளபோதும், வருகைக்கான திகதி இன்னமும் இறுதி செய்யப்படவில்லை என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கையின் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் வெளியிட்ட அறிக்கையில் புதிதாக தெரிவுசெய்யப்படும் அரசாங்கம் இனமோதலுக்கான அடிப்படைக் காரணங்களுக்குத் தீர்வைக் காணவேண்டும் என வலியுறுத்தியிருந்தார்.

பொறுப்புக்கூறலில் காணப்படும் இடைவெளியை நிரப்புவதற்கும் நல்லிணக்கத்தை நோக்கி முன்னேறுவதற்கும் அரசாங்கம் அடிப்படை அரசமைப்பு நிறுவன ரீதியான மாற்றங்களை முன்வைக்கவேண்டும் எனவும் அவர் சுட்டிகாட்டியிருந்ததுடன், பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவதை உடனடியாக நிறுத்தவேண்டும் என்றும் பரிந்துரைத்திருந்தார்.

சர்வதேச சமூகத்தால் முன்வைக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் கரிசனைகளைக் கையாள்வதில் அரசாங்கம் தடுமாற்றத்தைக் கொண்டிருக்கும் நிலையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் வருகை முக்கியமான ஒன்றாகப் பார்க்கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் வொல்க்கெர் டேர்க் வரும்பட்சத்தில், ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் ஒருவர் ஒன்பது வருடங்களின் பின்னர் இலங்கைக்கு வரும் சந்தர்ப்பமாக அமையும். இறுதியாக 2016 பெப்ரவரியில் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவிவகித்த வேளை செய்த் ராத் அல்ஹுசைன் இலங்கைக்கு வந்திருந்தார். வோர்க்கெர் டேர்க்குக்கு முன்னர் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளராகப் பணியாற்றிய மிச்செல் பச்லெட் இலங்கை வருவதற்கு விருப்பம் தெரிவித்திருந்தபோதும் அது சாத்தியமாகவில்லை. (அ-எ-இ)

## 161...

சுமார் 7 ஆண்டுகளுக்குப் பின்னர் உள்ளூராட்சிசபைகளுக்கான தேர்தல் கடந்த மே 6 ஆம் திகதி நடைபெற்றது. அந்தத் தேர்தலில் 161 சபைகளில் ஆட்சி அமைப்பதற்கான அறுதிப் பெரும்பான்மையை அரசியல் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்கள் பெற்றுள்ளன. நூற்றுக்கும்மேற்பட்ட சபைகளில் ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தி இன்று ஆட்சியமைக்கின்றது. 161 சபைகளுக்குரிய தவிசாளர் மற்றும் பிரதித் தவிசாளர் நியமனமும் இடம்பெறும்.

கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் மாநகரசபைகள் உட்பட 178 சபைகளில் ஆட்சியமைப்பதற்கான அறுதிப்பெரும்பான்மைப் பலத்தை எந்தவொரு அரசியல் கட்சியோ அல்லது சுயேச்சைக் குழுக்களோ பெறவில்லை. இந்தச்சபைகளுக்கான தவிசாளர் மற்றும் பிரதித் தவிசாளர் நியமனம் உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் இன்று நடைபெறும் கூட்டத்தின் பின்னர் முடிவெடுக்கப்படும்.

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் 266 சபைகளில் ஆளும் கட்சியான தேசிய மக்கள் வெற்றிபெற்றிருந்தாலும் 115 வரையான சபைகளிலேயே தனித்து ஆட்சியமைப்பதற்குரிய பெரும்பான்மை பலத்தைப் பெற்றுள்ளது. வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியக் கட்சிகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சியே பெரும்பாலான சபைகளைக் கைப்பற்றியுள்ளது.

அதேவேளை, கொழும்பு மாநகரசபையைக் கைப்பற்றுவதற்கு ஆளும் கட்சியும், எதிரணிகளும் தீவிரம் காட்டிவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-எ-44)

## செம்மணிப்...

மாக அவை இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையில் இன்று அகழ்வு நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன.

செம்மணி சிந்துபாத்தி மாயனத்தில் கடந்த பெப்ரவரி மாதம் அபிவிருத்தி நடவடிக்கைக்காக குழிகள் வெட்டப்பட்ட போது மனித எலும்பு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இது தொடர்பாகப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு, பொலிஸார் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர். கடந்த பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி சம்பவ இடத்துக்குச் சென்று நீதிவான் ஆய்வுகளை மேற்கொண்டதுடன், அகழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிட்டார். கடந்த 15 ஆம் திகதி அகழ்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. இரண்டாம் நாளான 16ஆம் திகதி மூன்றடி ஆழத்தில் முழுமையான என்புத் தொகுதி ஒன்றும், மண்டையோடு ஒன்றும் இனங்காணப்பட்டிருந்தது. அதனால் அங்கு மனிதப் புதைகுழி இருக்கலாம் என்ற சந்தேகம் வலுப்பெற்றிருக்கின்றது.

அதன்பின்னர் சீரற்ற காலநிலை காரணமாகத் தற்காலிகமாக அகழ்வு நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையில், இன்று மீண்டும் அகழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (அ-எ-26)

## நாட்டுக்குத்...

சபைகளுக்குத் தேசிய மக்கள் சக்தி சார்பில் தெரிவாகியுள்ள உறுப்பினர்களின் உறுதியுரையேற்பு நிகழ்வு அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய நிலையில் கைதுசெய்யப்பட்ட ஏதிலிக்கு பிணை வழங்குவதற்கு ஆட்சேபனை தெரிவிக்கக்கூடாது எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மீது புலம்பெயர்வாழ் தமிழ் மக்களுக்கும் நம்பிக்கை உள்ளது. ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் ஆட்சிகாலத்தில் இந்த நாடு கட்டியெழுப்பப்படாவிட்டால் இலங்கைக்கு விமோசனம் கிடையாது எனவும் அவர்கள் கருதுகின்றனர். இலங்கைக்கு அதிகளவு முதலீடுகளை கொண்டுவருவதற்கு கனடா வாழ் முதலீட்டாளர்கள் திட்டமிட்டுள்ளனர்.

புலம்பெயர் தமிழர்கள் நாட்டுக்காக நேசக்கரம் நீட்டினாலும் ஒரு சிலரின் நடவடிக்கையால் அசம்பாவிதங்கள் ஏற்படுகின்றன. இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய ஏதிலி ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அதையடுத்து இந்தியாவில் இருந்து வருபவர்களை அநுர அரசாங்கம் கைது செய்கின்றது என சிலர் தகவல்களை பரப்பிவருகின்றனர்.

அரசாங்கம் அவ்வாறு கைதுசெய்யவில்லை. இந்த விடயத்தில் உடன் தலையிட்டுள்ளது. இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்புவர்களைக் கைதுசெய்யக்கூடாது என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்டவருக்கு பிணை வழங்குவதற்கு மறுப்புத் தெரிவிக்கக்கூடாது என்ற ஆலோசனையும் வழங்கப்பட்டுள்ளது.

எனினும், தீய குணம் படைத்த - தீய நோக்கத்துடன் செயற்படும் அரசியல் சக்திகள் உள்ளன. அந்த தீய சக்திகளை சுத்தப்படுத்தவேண்டும் - என்றார். (அ-எ-44)

## சைக்கிள் - ...

களிடையே இழுபறி நிலைமை தொடர்கின்றது. இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்பன இது தொடர்பில் சந்திப்புகளை நடத்திவருகின்றன.

நேற்றுமுன்தினம் இலங்கைத்தமிழரசுக் கட்சிக்கும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையே உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பது தொடர்பாக யாழ்ப்பாணத்தில் சந்திப்பு நடைபெற்றது. அந்தச் சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவித்திருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பது தொடர்பாகப் பொதுவான சில உடன்பாட்டுக்கு வந்துள்ளோம் என்று தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் இடையே உள்ளூராட்சிசபைகளில் ஆட்சியமைப்பது தொடர்பாக நேற்று சந்திப்பொன்று நடந்துள்ளது. இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், கஜதீபன், த.சித்தார்த்தன் ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத் தலைவர்களுள் ஒருவரான த.சித்தார்த்தன் தெரிவித்ததாவது:-

இது ஓர் ஆக்கபூர்வமான சந்திப்பு. நல்ல முடிவு ஒன்று எட்டப்படும் என்று நம்புகின்றேன். நாளை (இன்று) திங்கட்கிழமை எழுத்துமூலமான ஆவணம் ஒன்றில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். அது நடைபெறும்போது ஊடக சந்திப்பில் விவரங்களை வெளிப்படுத்துவோம் - என்றார். (அ-எ-125-26)

## சிறுவன்...

முல்லைத்தீவு உடுப்புக்குளத்தில் தோணிகவிழ்ந்துவிபத்துக்குள்ளானதில் 10 வயதுச் சிறுவன் உட்பட இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது. தாமரைப் பூக்களைப் பறிக்கச் சென்ற போதே இந்த அனர்த்தம் நடந்தது என்று கூறப்படுகின்றது.

அளம்பிலைச் சேர்ந்த 10 வயதுச் சிறுவன் ஒருவரும், 25 வயது இளைஞர் ஒருவரும் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர். இவர்கள் இருவரும் உறவினர்களாவர். நீரில் மூழ்கிய இருவரும் மீட்கப்பட்டு முல்லைத்தீவு மருத்துவனைக்குக் கொண்டுசெல்லப்பட்டபோதும், அதற்கு முன்னதாகவே அவர்கள் உயிரிழந்துவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. சி.பிரணவன் (வயது-10), இ.நிஷாந்தன் (வயது-25) ஆகியோரே உயிரிழந்துள்ளனர். உடற்கூற்றுப் பரிசோதனைக்காக உடல்கள், முல்லைத்தீவு மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-எ-26)

## 'செல்பி'யால்...

வயதுச் சிறுமிகள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மூன்று சிறுமிகள் வழிபாட்டுக்காகக் கோவிலுக்குச் சென்றபோது, இருவர் கேணிக்குள் இறங்கி ஒளிப்படம் எடுக்க முயன்றபோது நீருக்குள் மூழ்கியுள்ளனர். மற்றைய சிறுமி இருவரையும் காப்பாற்ற முயன்றபோதும் அது பயனளிக்காது இருவரும் நீருக்குள் மூழ்கியுள்ளனர்.

நீருக்குள் மூழ்கிய இரு சிறுமிகளும் சில மணிநேரத்தில் அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு மாஞ்சோலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும், அவர்கள் உயிரிழந்துள்ளனர். ச.ரஸ்மிலா மற்றும் ர.கிருசிகா ஆகிய இரு சிறுமிகளே உயிரிழந்தவர்களாவர்.

உயிரிழந்த சிறுமிகள் பூதன்வயல் மற்றும் மாமூலை ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள். இவர்கள் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் தரம் 10இல் கற்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உடற்கூற்றுப் பரிசோதனைக்காக உடல்கள் முல்லைத்தீவு மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றன. (அ-எ-26)

## கிளிநொச்சி...

வளாகத்தில் உள்ள கிணற்றில் நீரே மருத்துவமனையின் அனைத்துத் தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றது. இந்தக் கிணற்றில் இருந்து பெறப்படும் நீர் மருத்துவமனையில் உள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திரிக்கப்பட்டுக் குடிதண்ணீருக்கும் பயன்படுத்தப்படுகின்றது. ஏனைய தேவைகளுக்கு இந்த நீர் நேரடியாகப் பயன்படுத்தப்பட்டுவருகின்றது. இந்தக் கிணற்று நீர் சில தினங்களுக்கு முன்னர் ஆய்வுக்குட்படுத்தப்பட்டபோது அதில் மலத்தொற்று (ஈகோலி) உள்ளமை கண்டறியப்பட்டது. அதையடுத்து நீரில் தொற்று நீக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மலத்தொற்று நீக்கியாகக் குளோரின் பயன்படுத்தப்படுகின்றது.

அதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நகரையும், நகரை அண்டிய பிரதேசங்களிலும் பெரும்பாலான கிணறுகளில் உள்ள நீரில் மலத்தொற்று காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. கடந்த ஆண்டு நகரையும், நகரை அண்டிய பிரதேசங்களிலும் உள்ள கிணறுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் பல கிணறுகளின் நீரில் மலத்தொற்றுக் கண்டறியப்பட்டுள்ளது.

பொதுமக்கள் கிணற்று நீரைக் குடிப்பதற்கு பயன்படுத்தும்போது நன்கு கொதிக்க வைத்துப் பயன்படுத்த வேண்டும் என்றும் அல்லது கிணற்றில் குளோரின் இட்டு தொற்று நீக்கவேண்டும் என்றும் சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர். (அ-எ-214-113)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இந்தியாவில் கொரோனா 3000

இந்தியாவில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை மூவாயிரத்தை அண்மித்துள்ளது.
ஹொங்கொங், சிங்கப்பூர், சீனா மற்றும் தாய்லாந்து உள்ளிட்ட தெற்கு ஆசிய நாடுகளில் கொரோனாத் தொற்று மீண்டும் தலைதூக்கியுள்ளது.
இந்தநிலையில், இந்தியாவிலும் கடந்த மே மாத ஆரம்பத்தில் கொரோனாத் தொற்று மீண்டும் பரவத்தொடங்கியது.
கடந்த மே 26 ஆம் திகதி இந்தியாவில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை ஆயிரத்து 10 ஆக காணப்பட்ட நிலையில் தற்போது 2,710 ஆக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
கொரோனாத்தொற்று கேரளா, மகாராஷ்டிரா மற்றும் டெல்லி ஆகிய இடங்களிலேயே அதிகரித்துள்ளது. (ச-இ)

### யாழ். நூலகம்...

ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் முன்னெடுக்கப்பட்டது.
நேற்றுக்காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் நூலக மண்டபத்தில் பிரதம நூலகர் சிவரகன் அனுசியா தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.
நிகழ்வில் யாழ்ப்பாணப் பொதுநூலகம் உருவாகுவதற்குக் காரணகர்த்தாவாக விளங்கிய செல்லப்பா, யாழ்ப்பாணப் பொதுநூலகம் எரியூட்டப்பட்டமையை அறிந்து உயிரிழந்த தாவீது அடிகள் ஆகியோருக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இருவரின் உருவப்படங்களுக்கும் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு, நினைவுச்சுடர்கள் ஏற்றி, மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து நினைவுரைகள் இடம்பெற்றன.
யாழ்ப்பாணப் பொதுநூலக எரிப்புத் தொடர்பாக கவிஞர் எம்.ஏ.நுஃமான் எழுதிய "புத்தரின் படுகொலை" எனும் தலைப்பிலான கவிதையை யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் தரம் - 03 மாணவன் கி.டர்சானந் வாசித்தார்.
இந்த நிகழ்வில் யாழ்.மாநகரசபையின் ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன், நூலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.
சுமார் 97 ஆயிரம் நூல்களுடன், ஆசியாவின் மிகப்பெரிய நூலகமாக விளங்கிய யாழ்ப்பாணம் பொது நூலகம் 1981ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி அப்போதைய அரசாங்கத்தின் உதவியுடன் சிங்களக் காடையர்களால் எரித்து அழிக்கப்பட்டது. அங்கிருந்த அரிய நூல்கள், சுவடிகள் தீயில் எரிந்து அழிவடைந்தன. (அ-எ-66)

### பிரபாகர...

மடைந்து சிகிச்சை பெற்றுவந்த அவரது மகன் நேற்று உயிரிழந்துள்ளார்.
கடந்த திங்கட்கிழமை கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பிரபாகர சர்மா அவரது மனைவி சீதாலக் ஷ்மி, மூத்த மகன் அக் ஷை, மாமனார் ஆகியோர் பயணித்த கார், யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த டிப்பருடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.
பிரபாகர சர்மா சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில், அவரது மனைவி, மகன், மாமனார் படுகாயங்களுடன் வவுனியா மருத்துவனையில் சேர்க்கப்பட்டனர். மகன் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப் பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வந்தநிலையில் நேற்று உயிரிழந்துள்ளார். (அ-எ-26-66-125)

### ஆசியாவில்...

நோய்கள் தொடர்பான நிபுணர் மருத்துவர் ஜூட் ஜயமஹ தெரிவித்துள்ளார்.
நாடு முழுவதும் உள்ள பல மருத்துவ மனைகளில் இருந்து சேகரிக்கப்பட்ட உயிரியல் மாதிரிகளில் நடத்தப்பட்ட ஆய்வு மூலம் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள அவர், இந்த கொரோனா வைரஸ் திரிபு தொடர்பாக தேவையற்று அச்சம்கொள்ளத் தேவையில்லை என்றும் தெரிவித்துள்ளார்.
புதிய கொரோனா வைரஸ் திரிபுகள் அவ்வப்போது வெளிவருகின்றன என்று சுட்டிக்காட்டிய அவர், அதிகாரிகள் நிலைமையைத் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர் என்றும், பொதுமக்கள் அமைதியைப் பேண வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.
அதேவேளை, கர்ப்பிணிப் பெண்கள், முதியவர்கள் மற்றும் நாள்பட்ட நோய்கள் உள்ளவர்கள் போன்ற பாதிக்கப்படக்கூடிய குழுவினர் முகக்கவசங்கள் அணிதல் மற்றும் சன நெரிசலான இடங்களைத் தவிர்ப்பது உள்ளிட்ட சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவது புத்திசாலித்தனமானது என்று சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-எ-இ)


**வாடகைக்கு**

மானிப்பாய் கூலாவடி சந்தியில் உணவகம் வாடகைக்கு.

தொடர்பு: 076 653 3814

**இலவசச கிரிக்கெட் பயிற்சிகள்**
(Grassroots Cricket Academy)

மாற்றுத் திறனாளிகளுக்கான கிரிக்ககெட் பயிற்சிகளும் வழங்கப்படும்
சக்கரநாற்காலி துடுப்பாட்டப் பயிற்சிகள்.
மேசைத் துடுப்பாட்டம்
சிறுவர்களுக்கான கிரிக்கெட் பயிற்சிகள்.
இடம்- Jaffna Stalions Cricket பயிற்சிக்கூடம்.
(யாழ்/பரியோவான் கல்லூரிக்கு முன்னால்)
வயது (06-12 வரை)
நேரம்-மாலை 5.00-6.00 மணிவரை (வெள்ளிக்கிழமைகளில்)

தொடர்பு: 077 081 3107

**மணிவிழா வாழ்த்துக்கள்!**



சைவப்புலவர்
திரு.செல்லையா பரமேஸ்வரன்
அதிபர் (SLPS-2)

இன்றைய நாள் உங்களுக்கானது !
அறுபது ஆண்டுகளில் நீங்கள் அடைந்துள்ள உயரம் பெரிது.
கல்விக்கான உங்கள் சேவை மிகவும் அற்புதமானது.
கல்வியை நீங்கள் நேசிப்பது போல் கல்வியும் உங்களை நேசிக்கின்றது..
ஒரு பாடசாலையின் முன்னேற்றத்தில் அதிபரின்
பங்களிப்பானது மிகவும் முக்கியமானது.
அதை நீங்கள் மிகவும் சரியாக முன்னெடுத்து உங்கள்
பாடசாலையை முன்னிறுத்தியுள்ளீர்கள்.
உங்கள் உத்வேகம் அனைவரையும் உத்வேகமாக்குகின்றது.
நீங்கள் ஒரு சிறந்த அதிபர்!
உங்கள் உழைப்பே உங்களை உயர்த்தியுள்ளது.
இனி வரும் ஓய்வுகாலம் உங்களை நிறுத்திவிடபோவதில்லை,
தொடருங்கள் உங்கள் சேவையை..
இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்...!

Hari Bol Square

என்றும் உங்களுடன்,
ஹரிபோல் குழுமத்தினர்.
ஹரிபோல் சதுக்கம் -
மருதனார்மடம், யாழ்ப்பாணம்.

**21ம் நாள் நினைவு அழைப்பும் நன்றி நவிலலும்**
அமரர். **குருசுமுத்து பாக்கியநாதன்**

தோற்றம் 25 10 1951



மறைவு 14 05 2025

எமது தந்தையாரின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு அனுதாபங்களைத் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றிகள். இறைபதமடைந்த செய்தி கேட்டு நேரடியாக வருகை தந்தும், சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் இரங்கல்களைத் தெரிவித்த யாழ் மற்றும் கொழும்பு மாகாண அமலமரித் தியாகிகள் சபையின் மாகாண முதல்வர்கள், குருக்கள், மறை மாவட்டக் குருக்கள், துறவிகள் அனைவருக்கும் எமது நன்றிகள். மேலும் வருகை தந்து அஞ்சலி செலுத்திய டோக்கியோ சீமெந்து நிறுவன முகாமைத்துவப் பணியாளர்கள் மற்றும் ஏனைய ஊழியர்கள், சிஹிறி ரூபிங் நிறுவன அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கும், அகில இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத் திருஅவையினர் மற்றும் பக்திச் சபையினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு நாளை (03.06.2025) செவ்வாய்க்கிழமை காலை 5.45 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறும் நினைவுத்
திருப்பலியிலும் எமது இல்லத்தில் நடைபெறும் மதிய நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
அருட்பணி. கிறிஸ்ரி நிர்மலறாஜன் (அ.ம.தி) 077 241 8647 (மகன்), கிறிஸ்ரி அருள்றாஜன்-077 3733 480 (மகன்), கிறிஸ்ரி கருணறாஜன் 076 2380837 (மகன்)
அல்பேட் பிரீஸ் (பிரான்ஸ்) - 0033651850594 (மருமகன்), ஆஞ்சலோ ஞானேஸ்வரன் (கனடா - 0016474031441 (மருமகன்)


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... இல் உள்ள அவர்களது பணிமனையில் 02.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org